**ஹாலிஎல பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

---

**1. நிதிசார் கூற்றுக்கள்**

**1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2014 ஒக்டோபர் 31 ஆந் திகதியளவிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 மே 13 ஆந் திகதியன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**1.2 கொடுக்கல் வாங்கல்கள், செயற்பாடு, செயற்திறன் தொடர்பான கருத்துரைகள்**

**1.2.1 ஊழியர் கடன்**

சபையில் பணியாற்றி இடமாற்றத்திற்குள்ளான, சேவை இடை நிறுத்தத்திற்குள்ளான இறந்த ஊழியர்கள் / உத்தியோகத்தர்கள் பதினான்கு பேரது 4 ஆண்டுகளுக்கு மேலாக அறவிடப்படாதிருக்கும் ஊழியர் கடனாகிய ரூபா 163,253 இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் XXIV அத்தியாயத்தின் 1.6 மற்றும் 4 பிரிவுகளில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடப்படாதிருந்தது.

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 வருவாய் நிர்வாகம்**

**2.1.1 தீர்வையும் வரியும்**

2013 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்த தீர்வை, வரி என்பவற்றின் நிலுவை அறவிடப்படுவதானது 37 சதவீதமாக இருந்ததுடன், ஆண்டின்போது அறவிடுவதற்கிருந்த வருவாயில் அறவிடப்பட்ட தொகை 36 சதவீதமாகிய நலிவான மட்டத்திலேயே இருந்தது.

**2.1.2 காணியைக் குத்தகைக்கு வழங்குதல்**

ஹாலி எல நகரில் பண்டாரவளை வீதியை அண்மித்ததாக அமைந்துள்ள 2 றூட், 6.9 பர்ச்சஸ் காணி வருடாந்தம் ரூபா 48,000 வீதப்படியான குத்தகைத் தொகைக்கு நெடுங்காலமாக வழங்கப்பட்டிருந்தது. போட்டியுடனான, முறையான கேள்விகள் கோரப்படவில்லை.

வருடாந்த குத்தகைத் தொகையை அரசாங்க மதிப்பிட்டாளரின் மூலம் மதிப்பீடு செய்யாது சபையே தீர்மானித்திருந்தது. குறித்த காணியின் ½ ஏக்கரைக் குத்தகைக்கு வழங்குவதற்கு அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தபோதும், குத்தகையாளருடனான உடன்படிக்கைப் பிரகாரம் 2 றூட் 6.9 பர்ச்சஸ் காணி குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 ஒப்பந்த நிர்வாகம்**

எட்டம்பிடிய உப அலுவலகக் கட்டிடத்தின் ஆயுர்வேத பொதுசன சுகாதாரப் பரிசோதகர் அறை (PHI) மற்றும் களஞ்சிய அறையுடனான பகுதியின் கூரையை *சுவரிலிருந்து மேலே உயர்த்துவதற்கான ஒப்பந்தம்*

எடம்பிட்டிய உப அலுவலக கட்டிடத்தைப் பழுதுபார்ப்பதற்காக கட்டுகஹ கிராமிய சமுர்த்தி அபிவிருத்திச் சங்கத்துடன் 2012 நவெம்பர் 26 ஆந் திகதியன்று ரூபா 315,794 க்கான உடன்படிக்கையில் ஈடுபட்டு 2012 டிசெம்பர் 4 ஆந் திகதியன்று ரூபா 63,158 முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஒப்பந்தத்தில் ஈடுபட்ட சமுதாய அடிப்படையிலான நிறுவனத்தைத் தெரிவு செய்வது தொடர்பாக 2012 ஜனவரி 05 ஆந் திகதிய 01/2012 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் திணைக்களத் தலைவர் மற்றும் பிரதேச் செயலாளரால் பெயரிடப்பட்ட இருவர் அடங்கிய மூவரைக் கொண்ட குழுவினரின் சிபார்சு பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) குறித்த சுற்றறிக்கையின் 3.2 ஆம் பந்தியின் பிரகாரம் சமுதாய அடிப்படையிலான நிறுவனத்தின் தகைமைகள் பரிசீலிக்கப்படவில்லை.

(இ) பழுதுபார்க்கப்பட வேண்டிய பகுதியினது கூரையை அகற்றி அப்புறப்படுத்தியதன் பின்னர், மதிப்பிடப்பட்ட வேலைகள் குறித்த காலத்துள் நிறைவேற்றப்படாமையால் ஏற்பட்ட கவனமின்மை காரணமாக கட்டிடத்தின் உள்ளே மழைநீர் சேகரிக்கப்பட்டு அதன் நிமித்தம் சுவர் இடிந்து வீழ்ந்தமையும் வேலையானது முற்றாகக் கைவிடப்பட்டிருந்தமையும் 2014 ஜனவரி 23 ஆந் திகதியன்று சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தருடன் வேலை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின்போது அவதானிக்கப்பட்டது.

(ஈ) இவ்வேலைகள் தொடர்பாக எட்டம்பிட்டிய உப அலவலகக் கட்டிடத்தில் கழற்றி அப்புறப்படுத்தப்பட்ட கூரைத் தகடுகள், பறாளை, ரீப்பை, கதவுகள், யன்னல்கள், ஓடுகள் என்பன நேரடிப் பரிசோதனைக்குச் சமர்ப்பிக்கப்படாததுடன் அப்பொருட்கள் பதிவுசெய்யப்படாதுமிருந்தன.

## 3.2 பயன்படுத்தப்படாத / குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

(அ) இடர் முகாமைத்துவ அமைச்சிடமிருந்து நன்கொடையாகப் பெறப்பட்ட JZC 350 ஆம் இலக்க பெரிய கொங்கிரீட் கலவை இயந்திரம்

(ஆ) கை டிறக்டர் (V9055257 / WV 90028884)